**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3 தாராபுரம்**

**அ.வ.எண்.302/2023**

2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 02–ம் நாள் வியாழக்கிழமை **வா.சா.3**

சாட்சியின் சாட்சியம் திரு.C.M.சரவணன்,B.A.,L.L.M., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | வெங்கிடுசுப்பிரமணியம் | தொழில் |
| த/பெ | நாச்சிமுத்துக்கவுண்டர் | கிராமம் |
| வயது | | தாலுகா |
| | | மாவட்டம் |

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு**

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் 2002 ஆம் வருடம் வரை சிறு கிணறு கிராம பஞ்சாயத்து தலைவராக இருந்தேன். 17.02.1982 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தை நான் பார்த்ததில்லை. மேற்படி பாகப்பிரிவினை பத்திரம் யார் யாருக்குள் ஏற்படுத்தப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி பாகப்பிரிவினையில் பெரியசாமிக்கு ஒதுக்கப்பட்ட பி ஜாபிதா சொத்து எவ்வளவு விஸ்தீரணம் கொண்டது என்னென்ன காலை எண்கள் உள்ளடக்கியது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பெரியசாமியின் மகள் பெயர் வள்ளியாத்தாள் என்றால் சரிதான். அவருக்கு எந்த வருடம் திருமணம் ஆனது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி வள்ளியாத்தாளுக்கு பழனிசாமி என்பவர் முன்னிலையில் எந்த தேதியில் ரூபாய் 30,000 கொடுக்கப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தேதி எனக்கு நினைவில்லை.

2. நான் வள்ளியாத்தாளிடம் விடுதலை பத்திரம் எழுதி வாங்க வேண்டும் என்று யோசனை சொன்னேனா என்றால் இல்லை. அவ்வாறு பணம் கொடுத்து விடுதலை பெற்றிருந்தால் அது குறித்து பத்திரம் எழுதி வாங்கி இருப்பார்கள் என்றாலும் அவ்வாறு பணம் கொடுக்கப்படவில்லை என்று சொன்னாலும் சரியல்ல. பணம் வாங்கிக்கொண்டு வள்ளியம்மாள் தன்னுடைய உரிமையை விட்டுக் கொடுத்தார் என்று நான் கூறுவது பொய் என்று சொன்னால் சரியல்ல. பெரியசாமிக்கும் ராமசாமிக்கும் பத்திரம் எதுவும் ஏற்படவில்லை ஆனால்

வாய்மொழியாக தன்னுடைய பாகத்தை பெரியசாமி, ராமசாமிக்கு விட்டு விட்டார். 1972–வது வருடம் அவ்வாறு வாய்மொழியாக பாகம் விட்டுவிட்டார் என்று நினைக்கிறேன். பெரியசாமி கவுண்டர் எந்த ஆவணத்தின் படியும் தன்னுடைய உரிமையை ராமசாமி கவுண்டருக்கு விட்டுக் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். எந்த தேதியில் ராமசாமி கவுண்டர், பெரியசாமி கவுண்டருக்கு ரூபாய் ஒரு லட்சம் கொடுத்தார் என்று எனக்கு தெரியவில்லை.

3. ராமசாமிக்கு இரண்டு மனைவிகள் என்றால் சரிதான். முதல் மனைவியின் பெயர் சரவணாம்பாள். ராமசாமிக்கும் சரவணாம்பாளுக்கும் எந்த வருடம் திருமணமானது என்று நினைவில்லை. அவர்களுக்கு திருமணமாகி சுமார் ஐந்து அல்லது ஆறு வருடங்கள் ஒன்றாக இருந்தார்கள். 1982–ம் வருடம் சரவணாம்பாள் ராமசாமி கவுண்டர் மீது சார்ஜ் டிகிரி தாக்கல் செய்து உத்தரவு பெற்றார்கள். மேற்படி உத்தரவு எந்தெந்த சொத்துக்களை பொறுத்து பெறப்பட்டது என்று எனக்கு தெரியாது. 1991 ஆம் வருடம் நடந்த ஏலக்கிரையத்தை நான் பார்வையிடவில்லை. பெரியசாமியின் சொத்தை ஏமாற்றுவதற்காக மேற்படி சரவணாம்பாளை வைத்து நீதிமன்றத்தில் ஒரு உத்தரவு பெறப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. சொத்தில் பிரதிவாதியின் தாயாருக்கு உரிமை உள்ளது என்றாலும் அதை ஏமாற்றுவதற்காக நான் மற்றும் ராமசாமி ஆகியோர் இணைந்து செயல்பட்டுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல.

4. ராமசாமி மீது பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்து இருந்த விபரம் எனக்கு தெரியும். மேற்படி வழக்கு திரும்ப பெறப்பட்டது என்று சொன்னால் நான் தான் ரூபாய் 75 ஆயிரம் வாங்கிக் கொடுத்தேன் அதன் அடிப்படையில் திரும்ப பெறப்பட்டது. அவ்வாறு பணம் கொடுக்கப்பட்டிருந்தால் மேற்படி வழக்கிலேயே மேற்படி தொகை கொடுக்கப்பட்டது பதிவு செய்யப்பட்டிருக்கும் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி வழக்கு திரும்ப பெற்ற பிறகு பத்திரம் பதிவு செய்வதாக குறிப்பிட்டதன் அடிப்படையில் தான் வாபஸ் பெறப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. ஈஸ்வரியின் கணவருக்கு நான் தாய்மாமன் முறை வேண்டும் என்று சொன்னால் சரிதான் அவரது பெயர் நினைவில்லை. நான் குறிப்பிட்டவாறு பிரதிவாதிகள் எந்தவிதமான தொகையும் பெற்றுக் கொண்டு தாவா சொத்தில் அவர்களது பாத்தியத்தை விடுதலை செய்து கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் வழக்கு வாபஸ் பெற்ற பிறகு வாதிகளின் தகப்பனார் ஆவணங்களை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல.

5. பிரதிவாதிகள் ராமசாமியின் மீது தாக்கல் செய்திருந்த வழக்கை திரும்பப் பெற்ற பிறகு தான் ராமசாமி ஆவணம் எழுதி வைத்தார் என்று சொன்னால் ஒரு பெண்ணின் மீது மட்டும் செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்தார். வாதிகள் ஏலக்கிரையத்தின் அடிப்படையில் தாவா சொத்துக்கள் அவர்களுக்கு சொந்தம் என்று குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் மேற்படி ஏலக்கரையும் பிரதிவாதிகளை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. ராமசாமிக்கோ சோமசுந்தரத்திற்கோ மேற்படி சொத்துக்களை ஏலம் எடுப்பதற்கு எந்த விதமான உரிமையும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் வள்ளியாத்தாளுக்கும் அவரது வாரிசுகளுக்கும் பாத்தியம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் மூன்றாம் வாதியின் மருமகனின் தாய்மாமன் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:- இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2026.04.02 17:36:04 +0530

3-ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.